# போர்வாள்

...திராவிடர் வார வெளியீடு...


வாள் 1 | திருவள்ளுவர் ஆண்டு 1979 மாசி 30 | விச்சு 30

13-3-48 சனிக்கிழமை


ஆசிரியர்கள்:



# சிரிங்கோ முதல்லே!

5-3-48 வெள்ளியன்று மாலை சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நகைச்சுவை அரசர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் கல்லூரித் தமிழ் மாணவர் கழக ஆண்டுவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாணவர்களும் பொதுமக்களும் கல்லூரி மண்டபத்தின் உள்ளும்புறமும் திரண்டு குழுமி இருந்தனர். அறிஞர் அண்ணாதுரை அரிய சொற்பொழிவாற்றினர்.



நகைச்சுவை அரசர்

நகைச்சுவை அரசர், அன்று, சிரிப்பு என்பது பற்றிப் பேசி கூடி இருந்த அனைவரையும் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்து விட்டார். பேச எழுந்தார். இப்படியும் அப்படியும் தலையைச் சற்று அசைத்தார். மண்டபம் நகைச்சுவை இன்பத்தை முழக்கிற்று. சிரிக்கிறீங்களா! சிரிங்கோ! நல்லா சிரிங்கோ! முதலிலே சிரிங்கோ! பயப்படாதிங்க! சும்மா சிரிங்கோ என்று மேலும் மேலும் கூறினர் என். எஸ். கே. சிரிப்பு உடனே மண்டபம் எங்கேயும் சிரித்து விளையாடத் தொடங்கி விட்டது.

நகைச்சுவை அரசர் பேச்சு சிரிப்பை மூட்டியதோடு நிற்கவில்லை; மக்கள் உள்ளத்தில் சிந்தனை நெருப்பையும் மூட்டிற்று. அதுதானே அந்தப் "பொல்லாத மனிதரின்" தனிச் சிறப்பு!

அவருடைய சொற்பொழிவின் சில பகுதிகள் :

நீங்க இப்ப சிரிச்சிங்களே அது போதாது. நல்லா குலுங்கக் குலுங்கச் சிரிக்கணும். மனமாரச் சிரிக்கணும்; கவலை யெல்லாம் மறந்திட்டு சிரிக்கணும். ஆனா நீங்க சிரிச்சது எப்படி இருந்தது தெரியுமா, லெனின் கிராடிலே இட்லர் சிரிச்தாரே அப்படி இருந்தது. நான் வேண்டுவது அந்தச் சிரிப்பை இல்லே! அது மரணச் சிரிப்பு.

நல்ல நாட்டுக்கு முதலிலே என்ன வேணும் யுமா? உணவு என்பீங்க. இல்லே! உடை என் இல்லே! ஓ, வீடு வீடு என்பீங்க. முதலிலே வே யது சிரிப்பு! ஆமாம்! சிரிப்புதான் முதலிலேவே பிறகுதான் உணவு உடை அதெல்லாம். இப்ப நான் சொல்லல்லே பெரிய பெரியவங்க எ சொல்லி இருக்கிறாங்க ஒரு டாக்டர் சொல்லி கிருரு, நல்லா சிரிச்சிட்டா வியாதி கூட வ டாக்டருக்கு பில் கூட கொடுக்க வேண்டிய என்று. சிரிப்பு ஒரு மருந்து. நம் வாழ்க்கைத் திற்கெல்லாம் தக்க மருந்து. அதனாலே தான் சிரிக்க சிரிக்க எனக்கு ஆநந்தம். ரொம்ப ஆ அதிலே எனக்கு ஒரு பெருமை கூட, என்ன வந்ததோ இல்லையோ நீங்க சிரிச்சிட்டீங்க, நா களை சிரிக்க வைக்கிறேனே அது எனக்குப் பெ தானே!

மக்களைச் சிரிக்க வைப்பது ஒரு பெரிய தே அப்படின்னா, நான் தேசத்துக்கு ஒரு பெரிய தெ செய்தமாதிரி. மாதிரி என்பதெல்லா, தொண் கிறேன் என்பதே தான். அதனாலே நா தேசத் தொண்டன் என்று சொல்லுங்க; மாட்டீங்களா? சரி போங்க! நீங்க சொல் நானே சொல்லிக்கிறேன்.

"என்னப்பா! கிருஷ்ணன் 5000 வா 10,000 வாங்கறான். அவனுக்கு சினிமாவிலே கொடுக்கறாங்க இது கொடுக்கறாங்க" என் சொல்லலாம். ஆனா, நான் சொல்றேன், அதெல்லாம் லட்சியம் இல்லை. எனக்கு மு சந்தோஷம் தான். நான் சந்தோஷப் ப மற்றவர்களை சந்தோஷப் படுத்தணும். அ பணம் சம்பாறிச்சிடணும், மாடிகட்டிக்கணும், யிருந்து ஏரோப்ளேன்லே ஏறி ஆகாசமெ பறக்கணும் என்கிற ஆசையில்லை. இப்ப சொ நான் ஒரு தேசபக்தனா, இல்லையா?

**சிரிப்பு இருக்கிறதே அது நல்ல, தூய, மெல்லிய தில் தான் உண்டு; நல்ல இதயத்தில்தான் நல் உண்டு.** நல்ல இதயம் இல்லாதவங்ககூட சிரி ஆனா அது நல்ல சிரிப்பா இருக்காது. இட்லர் தான் இருக்கும்.

எல்லாப் பிறவியிலேயும் மானிடப் பிற ரொம்ப சிறந்ததுன்னு சொல்றாங்க. " மானிடராய்ப் பிறப்பது அரிது" என்று பா இருக்குது. ஆனா, மனிதன் எதிலே சிறந்தவ கிலேயா? புலி, மனிதனை விட ரொம்ப இருக்கு. நடையிலேயா? குரங்கு நம்மைவிட நடக்குது. திறமையிலேயா? குருவி நம் நல்லா கூடு கட்டுது. மனிதன் உயர்ந்தவன் அது அழகால் அல்ல, நடையால் அல்ல, திற அல்ல, சிரிப்பால்! மனிதன் சிரிக்கத் தெ ஆகவே உயர்ந்தவன். மற்றப் பிராணிகளுக்

(இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க

# சிறைச்சாலை என்ன செய்யும்?

## சென்னையில் திராவிடர் வீர முழக்கம்

ஜூன் 3ஐ தமிழன் மறப்ப
லை. அது அவன் உள்ளத்
ஒடொரு உள்ளமாக, இரத்
தோடு இரத்தமாக இரண்
க் கலந்துவிட்டது. பண்
டைக்கால வீரனைக் கண்டால்
ன் கையிலே நாம் கூர்வா
க் காண்பது நிச்சயம்.
ண்ணிலாவைக் கண்டால்
நீள் வானத்தைக் காண்
உறுதி. குலுக்கென்று
க்கும் முல்லை மலர்க் கொடி
னறு கண்டால் அதி
ந்து நறுமணம் பிறக்கக்
ல் உறுதி. மந்தமாருதத்
ன்றல் கண்டால் அதில்
ர்ச்சியும் இன்பமும் தோன்
காண்பதும் நிச்சயம்.
வீய போல உண்மைத்
ன் ஒருவனைக் கண்டால்
ன் உள்ளத்தில் ஜூன் 3ஐ
காண்பதும் நிச்சயம்.
? ஜூன் 3 என்றால் இந்தி
ர்ப்புப் போராட்டம் என்று
ருள். அன்றுதான் முதன
ல், மொழிப்போரில், தமி
மீது ஆச்சாரியாரின்
க்கு முறை பாணம் பாய்ந்
அன்றுதான் சிறைச்சாலை
தமிழரைக் கூவி அழைத்
அன்றுதான் மறைந்த
ர் செ, தெ. நாயகமும்
இருவரும் சிறைக் கோட்
அழைந்தனர். மார்ச் 7ல்
ன்னையில் இருந்தவர்கள்
மற்றொரு ஜூன் 3 என்
நன்கறிந் திருப்பார்கள்.
ஒரு அத்தியாயம்.
7 அதற்கு அடுத்த அத்தி
ம். ஜூன் 3 இந்தி எதிர்ப்
போராட்டத்திற்கான
மா. உயர்த்தப்பட்ட

நாள். மார்ச் 7 திராவிட இன எழுச்சிக்கான போர் முரசு கொட்டப்பட்ட நாள்.

அன்று திருவண்ணாமலையிலே ஆறு திராவிட இளஞ் சிங்கங்கள் சிறை பிடிக்கப்பட்டன—கருஞ் சட்டை அணிந்த காரணத்திற்காக; பலப்பல நூற்றாண்டுகளாக பார்ப்பனீயம் எனும் மின்சார இரும்பு வலையிலே சிக்குண்ட திராவிடத்தை சிறை மீட்போம் என்று தெரிவிக்கும் அடையாளச் சின்னத்தைத் தாங்கி இருந்த காரணத்திற்காக; தம் இன இழிவைத் துடைப்போம் என்று எக்காளமிட்ட காரணத்திற்காக. அதே நேரத்தில் சென்னையில் திராவிடர் தலைவர் பெரியார் சிறைச்சாலை என்ன செய்யும் என்று வீர முழக்கம் புரிந்துகொண்டிருந்தார். அவர் பக்கம் நின்று, அண்ணா, மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை நமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை என்ற பண் இசைத்த வண்ணம் இருந்தார். இருவரையும் சூழ நின்ற திராவிடப் பட்டாளம், அணிவோம்! அணிவோம்! கருஞ்சட்டை அணிவோம்! என்று விண்ணைப் பிளக்க விம்மித ஒலி எழுப்பிக் கொண்டிருந்தது.

காலையில் தலைவர்களின் மந்திராலோசனைக் கூட்டம்; பிற்பகல் மக்கள் மன்றத்தில், மாநாடு! இரவு, கடற்கரை கீதம்! மூன்றுக்கும் திராவிடத்தின் பல பகுதிகளிலிருந்தும், சிறுபடைத் தலைவர்களும், சிறைக்கஞ்சாத சிங்க ஏறுகளும், வீர இளைஞர்களும், வீரத்தை உண்ணும் சோற்றிலே அவர்கட்குக் கலந்து கலந்தளித்த திராவிடத்திரு நாட்டு அன்னைமாரும் அணி அணியாக வந்திருந்தனர்.

மந்திராலோசனைக் கூட்டம் சிறிது—100 பேர் இருந்திருப்பர் அங்கு. மாநாடு கொஞ்சம் பெரிது.—3000 பேர் கொண்டது. கடற்கரைக் கூட்டம் ஒரு இலட்சம் என்னும் பிரம்மாண்டமான தொகையை எட்டிப் பார்க்கும் அளவினது. காலை—பிற்பகல்—இரவு என்னும் இந்தக் கால வரிசையிலே இந்த மூன்று கூட்டங்களும் முறைமுறையே அமைக்கப் பட்டிருந்தது மிக மிக அழகிய நிகழ்ச்சிச் சித்திரம். திராவிடர் இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கை எடுத்துக் காட்டும் எழில் நிறைந்தது இக் நிகழ்ச்சி. நம் இயக்கம் துவக்கத்தில் சிறிதாகத்தான் இருந்தது, அளவில்—காலை நிர்வாகக் குழு கூட் போல. பிறகு வளர்ந்தது–பிற்பகல் மாநாடு போல். இன்று பிராமணீயத்தின் சப்த நாடிகளையும் ஒடுக்குமளவுக்கு வளர்ந்திருக்கிறது—இரவில் கூடிய மாபெருங் கூட்டம் போல. வளர்ந்திருப்பதால் தான் பிராமணீயம், அமைச்சர் குழு எனும் துப்பாக்கியைக் கையிலேந்தி, தடை உத்தரவுகள் எனும் "ரவை"களை திராவிடர் இயக்கத்தின் மீது பாய்ச்சுகிறது, மாபாவி கோட்சே உத்தமர் காந்தியார் உடல் மீது நான்கு குண்டுகளைச் செலுத்தினனே அதுபோல! ஆனால் திராவிடர் இயக்கம் மண்ணில் சாயாது. சாய்க்க முடியாது பிராமணீயத்தால். ஏனெனில் அதன் உடல் எஃகு போன்றது. துப்பாக்கிக் குண்டுகள் தான் தூள்தூளாகும் அதன் மேல் பாய்ந்தால்.

காலை 10 மணிக்கு சென்னை மவுண்ட் ரோடில் உள்ள **தலைவர் பெரியார்** அவர்கள் இல்லத்தில் திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழுவின் கூட்டம் துவங்கிற்று. நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மட்டுமல்லாமல் திராவிட இதழாசிரியர்கள், சேனைத்தலைவர்கள், ஆங்காங்குள்ள தளபதிகள், முக்கிய பொறுப்பாளர்கள், பேச்சாளர்கள் இன்ன பிறரும் கூடி இருந்த
னர்.

போராட்ட அலைகள்! அனைவர் முகத்திலும் வீரத்தின் விளக்கம்! யார் யார் பேச்சிலும் தமிழ்க் கனல்! தன்மானத் தீப்பொறி! திராவிட எழுச்சி! "சர்க்கார் நம்மை வலுச் சண்டைக்கு இழுக்கின்றனர். நாம் அமைதி அமைதி என்றோம். அவர்கள், ஆத்திரம், ! அடக்குமுறை! என்கின்றனர். நாம் சாந்தம்—சமாதானம் என்றோம். அவர்கள் 144! செக்ஷன் 16! பிரிவு 17 என்றனர். நாம் அன்பு, அகிம்சை, அடக்கம் என்றோம்—அவர்கள் போலீஸ் சிறை சீரழிவு என்கின்றனர். இனியும் நாம் சும்மா இருப்பதா? நம் தன்மானத்திற்கு இழுக்குத் தேடுவதா என்று கேட்டனர் பற்பல வட்டாரத்துத் தளபதிகள். இருங்கள் பொறுங்கள் என்றார் பெரியார். இருந்தோமே! பொறுத்தோமே! அடங்கிக் கிடந்தோமே,' அளவு இல்லையோ என்று கொதித்தெழுந்தனர் படைத் தலைவர்கள். 'எனக்கு இல்லையோ அந்த ஆத்திரம் என்றார் பெரியார். முணுமுணுப்புடன் அடங்கி அமர்ந்தனர் கொதித்து எழுந்தவர்கள். பட்டி தொட்டிகளிலும் மூலை முடுக்குகளிலும் சின்னஞ்சிறு கிராமங்களிலும் கண்ட கண்ட இடங்களிலும் போலீசார் திராவிட கழகங்களைச் சோதனை இட்டுள்ளனர். சில இடங்களில் தாறுமாறாகவும் தவறான முறைகளிலும் நடந்து கொண்டுள்ளனர். இதற்கெல்லாம் பரிகாரம் தேட வேண்டாமா என்றனர் தளபதிகள். "தேடமாட்டேனா நான்? போர் தொடுக்கும் நேரம் உண்டு; அதுவரை பொறுங்கள்" என்றார் பெரியார். சர்க்கார், இல்லாதபடை ஒன்றை இருப்பதாக எண்ணிக் கொண்டு தடை விதித்துள்ளனர். அதுபற்றி நாம் கவலையுற வேண்டியதில்லை. ஆனால் கருஞ்சட்டை அணிவதே தவறு என்று கூறுவராயின் அப்போது உரிமைப் போர் தொடங்குவோம். நம் உரிமைகளை நிலைநாட்டுவோம் என்று பெரியார் விளக்கவுரை கூறிய பிறகு, **சமுதாய இழிவை நினைப்பூட்டும் அறிகுறியாக கருப்புடை அணிதல், இழிவு நீக்கப் பிரச்சாரம் செய்தல் ஆகிய காரியங்களில் சிறிதும் மாறுதலின்றி முன்னிலும் அதிகமான ஊக்கத்தோடு,** முன்னிலும் அதிகமான சாந்தமும் சமாதானமுமான முறையில்" திராவிடக் கழகத்தவர் நடந்து கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வேறு பல திட்டங்களும் நடை முறைகளும் வகுக்கப்பட்ட பிறகு தூத்துக்குடி மாநாட்டிற்கு அங்கீகாரம் தரப்பட்டு பிற்பகல் 1-மணிக்கு கூட்டம் முடிந்தது.

2-மணிக்கு மாநாடு. தலைவர் பெரியார், தளபதி அண்ணாதுரை, கழகத் தலைவர் வேதாசலம், மாணவர் தலைவர் சம்பத் முதலியோர் கருஞ்சட்டை அணிந்தவர்களாக மாநாட்டு மண்டபத்தில் நுழைந்த போது, அந்தக் கட்டிடம் அதிர எழுந்தது கை ஒலி. பெரம்பூர் தொழிலாளர்கள் நடத்திய மாநாடு அது. மாநாட்டுத் தலைவர் வரவேற்பாளர் முதலிய யாவரும் பாட்டாளி உலகத்தில் உலவும் தோ[...]களே.

"இன்று ஓர் நெருக்கடியான நாள் என்று நண்பர்கள் பலர் குறிப்பிட்டனர். ஆம்! ஆனால் நெருக்கடி நமக்கல்ல. சர்க்காருக்கு! நெருக்கடி இருப்பதால்தான் அவர்கள் நம்மைச் சிறைபிடிக்க எண்ணுகின்றனர். சிறையைக் காட்டி அவர்கள் திராவிடர்தம் உறுதியைக் குலைக்க எண்ணுவராயின், நான் முன் கூட்டியே தெரி[...]விக்க ஆசைப்படுகிறேன். அவர்கள் கட்டாயம் ஏமாந்[...]தான் போவார்கள். சிறை த[...]களுடைய ஓட்டைக் குடி[...]களை விடச் சிறியதல்ல என்[...]

## சிறை—ஒரு இன்டர்வெல்!

உங்கள் செயலாளர் பேசும்போது குறிப்பிட்டார் இந்திப் போர்போல மீண்டும் நமக்குச் சிறைவாசம் நேரலாமென்று. நேரட்டுமே, அதனால் என்ன? சர்க்கார் குற்றம் செய்தவர்களை மட்டுமேதான சிறைக்கு அனுப்புவார்கள் என்பதில்லை. குற்றம் செய்யாதவர்களையும் அனுப்புவதுண்டு. குற்றம் செய்யாதவர்களை மட்டுமல்ல, குற்றம் செய்வானோ என்று சந்தேகிக்கத் தக்கவர்களையும் தண்டிப்பதுண்டு. சந்தேகத்துக் குரியவர்களை மட்டுமல்ல, சர்க்கார் குற்றங்களை எங்கே சொல்லிவிடுவானோ என்ற சந்தேகத்தின்மீதும் சிலர் கைது செய்யப்படுவதுண்டு. சர்க்காருக்கோ சிறை இருக்கிறது. சிறையில் இருப்பதற்கோ ஆள் தேவையாய் இருக்கிறது. ஆகவே நம்மீது சிறைவாசம் திணிக்கப்படலாம். பொதுவாழ்க்கையில் உள்ளவர்கள் சிறைக்குச் செல்வது என்பது மாணவர்கள் மேல் படிப்புக்காகச் சீமைக்குச் செல்வது போன்றது. சிறைவாழ்க்கை ஒரு சாதாரண சம்பவம். முக்கியமான பகுதி அதற்கு முன்னும் பின்னும் நாம் செய்கிற பொதுத் தொண்டுதான். சினிமாவில் இன்டர்வல் (Interval) உண்டு. ஆனால் இன்டர்வல் அல்ல முக்கியம். அதற்கு முன்னும் பின்னும் வருகிற கதை. சிறை ஒரு இன்டர்வல் நமக்கு!

—சி. என். அண்ணாதுரை.

சென்னை பச்சையப்பனில் பேசியது

பது திராவிட மக்களுக்கு நன்ருகத் தெரியும். வீட்டிலே ஒரு வேளைதான் உணவு! இரு வேளை பட்டினி! சிறையிலோ வேளை தவருமல் உணவு பரிமாறப்படும் என்பதும் அவர்கள் அறியாத சேதி அல்ல. ஆகவே அவர்கள் சிறைக்கூடம் புகத் தயங்கமாட்டார்கள். கருஞ் சட்டையினரைச் சிறை வைத்துவிட்டால் நாட்டிலே கருப்புச் சட்டையே பிறகு இருக்காது என்று கருதிஞல் சர்க்கார்தான் பிறகு வருந்த நேரிடும். நாங்களல்ல. ஏனெனில் கதர் சட்டையே கூட அழுக்கேறிஞல் கருப்பாக மாறும்-மாறுகிறது என்பது எங்களுக்குத் தெரியும். நாட்டிலே எங்களையும் காங்கிரஸ் தவிர்த்த மற்ற எல்லாக் கட்சிகளையும் ஒழித்துவிட்டால்கூட அபிப்பிராய பேதம் என்பது மறைந்துவிடாது. அது அந்த வட்டாரத்திற்குள்ளிருந்தே கூட எழும்பும். கதரிலேயே கருப்பு தோன்றும்.''

என்று, தன் கருப்புச் சட்டையின் தோள்பட்டை காற்றிலே அசைய, மக்கள் உள்ளம் அந்தச் சட்டை மீது படிய, **அண்ணு**, வீர முழக்கம் புரிந்தபோது, இன்பம், நர்த்தனமாடிற்று மாநாட்டில். ஆனல் அவலம் நடமாடியிருக்கும் மந்திரி சபையில். அடுக்குச் சொற்கள் உருண்டோடிவர, அழகிய தொடர்கள் அவற்றை இணைத்து உருட்டித் தள்ள, வாக்கியங்கள் ஒன்றன் பின் ஒன்ருக அந்தச் சொல்லின் செல்வரிடமிருந்து பிறந்தபோது அதை அமைச்சர் குழுவினர் கேட்டிருந்தால், கருஞ் சட்டையைத் தடை செய்தது எவ்வளவு பெரும் பிழை என்பதைக் கட்டாயம் உணர்ந்திருப்பர்.

பின்னே **பெரியார்** உருக்கமான முறையில் அருமையான கருத்துக்களை அடுக்கடுக்காக வீசினர். அவர் அன்று ஆற்றிய பேருரையின் ஒவ்வொரு சொல்லும் கூடியிருந்த மக்கள் உள்ளத்தில் நேரே சென்று பாய்ந்தது. அங்கே ஒரு கணம் வீர உணர்ச்சியை, மறு கணம் இன்ப உணர்ச்சியை, அடுத்த கணம் கொதிப்புணர்ச்சியை, இன்னேர் கணம் கவலை உணர்ச்சியை மாறி மாறி விளைத்தது. இறுதியில் அவர் பேச்சை முடித்தபோது ஒவ்வொருவரும் அஞ்சாமை எனும் உணவுண்டு, உற்சாகம் எனும் உடை உடுத்து, புது வாழ்வு எனும் அலுவலகம் செல்லப் புறப்பட்டார் போல வெளியேறினர். முதலிலேயே தலைவர் வேதாசலம், தோழர் சம்பத் இருவரும் பேசினர்.

பெரியார், அண்ணு, இருவரும் எழுப்பிய உணர்ச்சி அலைகளில் நீந்திய வண்ணமே கடலோரம் சேர்ந்தது மாநாட்டில் திரண்டிருந்த மக்கட்கூட்டம். அங்கே மறுபடியும் உணர்ச்சி விருந்து. "அமைச்சர்களே! என் நண்பர்களே! எந்தக் காந்தியாரின் பல கொள்கைகளை எதிர்த்து தான் முப்பது ஆண்டுகளுக்கு மேலாகவும் போராடியதைக்கூட மறந்துவிட்டு எந்தப் பெரியார் உத்தமர் காந்தியார் பெயரால் புது சகாப்தம் தொடங்கலாம், புது நெறிகூட வகுக்கலாம் என்று கூறிஞரோ பெருந்தன்மையுடன், தியாக சிந்தையுடன், அதே பெரியாரையா நீங்கள் சிறை வைக்கப் போகிறீர்கள்! வையுங்கள். ஆனல் பிறகு என்ன நடக்கும் தெரியுமோ? நீங்கள் இரவிலே படுக்கையிலே புரண்டு புரண்டு படுக்கும்போது அந்த வெண்ணிறத் தாடிதான் தெரியும் உங்கள் கண் முன்னே — வேறென்றும் தெரியாது. அந்த தியாக புருஷரையா சிறை வைத்துவிட்டோம் என்ற எண்ணம்தான் தோன்றும்; வேறென்றும் தோன்ருது" என்று அண்ணு அவர்கள் குறிப்பிட்ட பகுதி மிக உருக்கமாக அமைந்திருந்தது. அவர் பேசுமுன், பெரியார் அவர்கள், நமது போராட்டம் எப்படி, வெறும் "நுனிப்புல் மேய்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஆட்சியாளருக்கு:

நமது பிரசாரத்தின் மூலம் நமது கழகத்திற்கு ஏற்பட்டுவரும் பலமான செல்வாக்கைக் கண்டு, தங்கள் பிராமணத் தன்மைக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று நடுக்கங்கொண்ட ஒரு சிறு கூட்டத்தின் நிர்ப்பந்தங்களுக்கு உட்பட்டுத்தான் கருஞ்சட்டைப் படை தடை உத்தரவை சர்க்கார் பிறப்பித்துள்ளனர் என்று நான் எண்ணுகிறேன். எது எப்படி இருந்தாலும் நாம் எந்த நெருக்கடியையும் சமாளிக்கத் தயாராய் இருந்துவருகிருேம் என்பதை மட்டும் ஆட்சியாளருக்குத் தெளிவாகத் தெரிவித்துவிட விரும்புகிறேன்.

## திராவிட மக்களுக்கு:

அண்மையில் நான் உட்பட பலர் கைது செய்யப்பட நேர்ந்தாலும் கழகத் தோழர்களும் பொது மக்களும் அமைதியாக நடந்து, திராவிடர் கழகம் மேற்போட்டுக் கொண்டுள்ள சமுதாய இழிவு நீக்கப் பணியை சிறிதும் தளர்த்தாமல் தொடர்ந்து நடத்த வேண்டுகிறேன்.

—பெரியார்.

போர்வாள்

13—3—48 சனிக்கிழமை

# அடக்குமுறை அத்தியாயம் ஆரம்பம்

ஆரம்ப ஆசிரியர்களின் அழு குரல் ஓர் புறம், தமிழ்ப் புலவர் குழுவினர் சிந்திடும் கண்ணீர் ற்றோர் புறம், கோவைத் தொழி ாளரின் உள்ளக் குமுறல் இன் ஞர் புறம், ஆறு அவுன்ஸ் ரிசியாமே, இதை உண்டு உயிர் ாழ வேண்டுமாமே என்று லறித் துடிக்கும் ஏழை மக்க ின் பெருமூச்சு வேறு ஓர் றம், உண்ண உணவில்லை யேனும் உடுக்க உடை இல்லை யேனும் இருக்க இடமாவது வேண்டாமா—அதுவும் இல் லயே இன்றைய ஆட்சியில் என்று எண்ணி எண்ணி வாடும் பொதுமக்கள் பிரச்சினை மற்றோர் புறம் என்னும் பரிதாப நிலையில் ாடு காட்சியளிக்கிறது. ஆனால் அதிகாரவர்க்கத்தின் கண்ணோட் டமோ இத்தனை பிரச்சினைகளை யும் ஒதுக்கித் தள்ளிவிட்டு திரா விடர் கழகத்தின்மீது திரும்பி யிருக்கிறது. வாழ்வுக்கும் சாவுக் கும் இடையே ஊசலாடுகின்ற னர் மக்கள், அவர்கள் சிந்தும் கண்ணீரைத் துடைக்கக்கூட நேரம் இல்லை ஆளவந்தார்க ளுக்கு, ஆனால் அவர்களை சாவுக் குழியிலிருந்து வாழ்க்கை வளத் தோட்டத்திற்கு அழைத்துச் செல்லும் மிக அரிய காரியத் தைத் தொடர்ந்து செய்துவரும் கருஞ்சட்டை இயக்கத்தின்மீது கிரிமினல் திருத்தச் சட்டத்தை வீசி அதை அடக்கமட்டும் நேர மிருக்கிறது. இது மிக துர்ப் பாக்கியமான நிலை. ஆனால் இந்த நிலையில்தான் உள்ளனர் இன் றைய ஆளவந்தார்கள்.

ஆம்! உடனடியாகக் கவனித் துத் தீரவேண்டிய பிரச்சினைகள் ஆயிரம் ஆயிரம் நாட்டிலே அலை மோதிக் கொண்டிருக்கின்றன என்றாலும் அவை பற்றிய கவலை ஒரு துளியுமின்றி, சர்க்கார், திராவிட சமுதாயத்தின் இழிவு நீக்கம் ஒன்றையே தன் இலட் சிய கீதமாகக் கொண்டிருக்கும் கருஞ்சட்டை இயக்கத்தை தடை செய்துவிட்டனர். ஊரெங் கும் நாடெங்கும் "சோதனைப் படலம்" தொடங்கிவிட்டனர். கருப்புச் சட்டைகளைக் காணும் இடத்தெல்லாம் தம் அடக்கு முறை தர்பாரை, கொஞ்சம் கொஞ்சம், அமுல் காட்டத் தொடங்கிவிட்டனர். கருப்புச் சட்டைகளையும், கழக ரசீதுகளை யும், நிகழ்ச்சிக் குறிப்புகளையும், பழைய பத்திரிகைகளையும் கைப் பற்றி எடுத்துச் செல்வதில் முனைந்து விட்டனர் சென்னை யில், தூத்துக்குடியில், இராம நாதபுரத்தில், நெல்லையில், மதுரையில், திண்டுக்கல்லில், எதிர்க்கோடியில் உள்ள திரு கழுக்குன்றத்தில், செங்கல்பட் டில், காஞ்சியில, வேலூரில் வந்தவாசியில், எங்கெங்கும் ஏதேனும் கிடைக்காதா என் எண்ணத்தில் எதை எதையே தேடும் துடிதுடிப்பை வெளி படுத்த முனைந்து விட்டனர்.

ஆரியம் களிக்க, அதன் மா பிலே தவழும் சிறுநூல் இ பத்தாம் அசைந்து அசைந்தா கையில் உள்ள பழம் பஞ்சா கம் பூரிக்க, சர்க்காரின் அடக்கு முறை அத்தியாயம் தொடங் விட்டது.

திருவண்ணாமலையில் கழக தோழர்கள் அறுவர் கைது செ யப்பட்டு விட்டனர்.

மேலும் பலர் சிறைசென் தீர வேண்டிய நிர்ப்பந்தத்தை சூழ்நிலையை, சர்க்கார் உருவாக் வருகின்றனர்.

தலைவர் பெரியார் எந்த நே மும் சிறைச்சாலை அன்பழைப்பு பெறக்கூடும்.

இயக்கத் தினசரி "விடுதலை மீது சர்க்கார் திடீர் வேட் போட்டாலும் வியப்பதற்கில்லை

குடி அரசு, திராவிடநா போர்வாள், திராவிடன் இன் பிற ஏடுகள் சர்க்காரின் அடக் முறை பலிபீடத்திற்கு இல யாகும் நிலையும் நேரிடலாம்.

நாமும் நம் தலைவரும் கழகமும் அமைதிப் பாசு இசைத்துக் கொண்டிருந்தாலு கூட, சாந்தியையும் சமாதான தையும் நாட்டில் நிலைநாட் கொண்டிருக்கிறோம் என்றாலு கூட, பலாத்காரத்தை பய படுத்தும் பாதகரை எதிர்த்தல லேயே நாம் கண்ணும் கருத் மாக இருந்து வந்திருக்கிறோ என்ற போதிலுங்கூட, அரசி லார் நம்மை இரும்புக் கம்

...ளுக்குப் பின்னால் நிறுத்திப் ...ர்க்க பேராவல் கொள்ள ...ம். அதைச் செயலில் காட்ட ...ம்.

1948-ல், சர்க்கார், 1938 எப் ...டி இருக்கும் என்பதை நேரில் ...ண நினைப்புக் கொள்ளலாம். ...ளமுத்துகளும் நடராசன் ...ளும் தமிழர் சமுதாயத்தில் ...ன்றைக்கும் இருக்கிறார்களா ...ன்பதை அறிந்துவிட வேண் ...ம் என்ற துடிதுடிப்பு அவர் ...ளுக்கு இருக்கலாம்.

...ஆள்வது நானா அல்லது இந்த ...ராமசாமி நாயக்கரா என்ப ...தத்தான் ஒரு கை பார்த்துவிட ...வண்டும் என்று அதிகார ...தாரணையில் பேசிய அன்பர் ...ச்சாரியார், பின் ஓர் நாள், ...ந்த இந்திச் சனியனுக்கு இவ் ...ளவு எதிர்ப்பு இருக்கும் ...ன்று தெரிந்திருந்தால் இதை ...வத்தே இருக்கமாட்டேனே ...ன்று அடிமூச்சுக் குரலில் ...ய வாசகத்தை, காலம் ...ந்துவிட்ட காரணத்தால், ...ன்றைய அரசாளும் பெருமக் ... ஒருக்கால் மறந்துவிட்டிருக் ...ம்.

...7-3-48 ல் திருவல்லிக்கேணி ...ற் கரையில் கூடிய அந்த ...பெருங் கூட்டம் இந்திப் ...ராட்ட காலத்தை நினைப்பூட் ... தன்மைத்தே என்றாலும் ...கார தேவதைகள் அதை ...ணிப்பார்க்க மறுத்துவிட ...ம்.

...அடக்குமுறை ஆயுதம் சர்வ ...லமை பொருந்தியது என்ற ...ணம் எவ்வளவு தவறானது ...பதை, உலக வரலாறு, ...ன் ஒவ்வொரு அத்தியாயத் ...ம் தெள்ளத் தெளிய விளக்கி ...க்கிறது என்றாலும் அந்த ...ற்றை புரட்டிப் பார்க்க ...க் குழுவினர்க்கு ஓய்வில் ...ல் போய்விடலாம்.

வெள்ளை ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறை வலுத்து வலுத்துத்தான் இந்திய தேசீய இயக்கத்தை வளர்த்தது என்பதையோ, வெல்லிங்டன் தர்பார்கள் தான் திருப்பூர் குமரன்களை உற்பத்தி செய்தது என்பதையோ, வீர சிதம்பரங்களும் லாலா லஜபதிகளும் பண்டித நேருகளும் ராஜேந்திர பிரசாத்களும் பிறந்ததும் வளர்ந்ததும் பறங்கியர் ஆட்சியின் அடக்குமுறை என்ற தொட்டிலில்தான் என்பதையோ, ஓமந்தூர்களும் டாக்டர் சுப்பராயன்களும், நம்மை அடக்கவேண்டும் என்று உள்ளத்தில் மூண்டெழுகின்ற சினத் தீயின் வெப்பத்தால், உணர்ந்து பார்க்க முடியாது போகலாம்.

அடிக்க அடிக்க பந்து ஓங்கி எழும்; அடக்க அடக்க மக்கள் வீறி எழுவர். இவை இயற்கை விதிகள். ஆனால் இயற்கை விதிகளைவிட சர்க்கார் விதிகள் பலம் பொருந்தியவை என்று சர்க்கார் எண்ணக் கூடும்; எண்ணுவது சகஜம் கூட. அந்த எண்ணம் அவர்களுக்கு நம்மை அடக்க வேண்டும் என்ற ஆசையை உள்ளத்தில் தூண்டாமல் போகாது.

அடக்குமுறை இருபுறமும் கூர்வாய்ந்ததோர் ஆயுதம். இன்று அடக்கப் படுபவர்கள் நாளை அரசாட்சிப் பீடத்தில் இருப்பதும், இன்று ஆளவந்தார்களாய் இருப்பவர்கள் நாளை எதிர்க்கட்சி மேஜைகட்கு முன்னால் அமர்வதும் வரலாறு; அல்ல — நித்திய நிகழ்ச்சி; இதை வேறு எவரையும்விட இன்றைய தேசீய சர்க்கார் நன்குணர்ந்திருக்கவேண்டும். ஏனெனில் இதுபோது மந்திரிகளாய் இருப்பவர்கள் முன்னாளில் சிறைக் கைதிகளாய் இருந்தவர்கள்! அன்று அவ்

## ✓ மார்ச் 13

தமிழ் மறவர் குடிப் பிறந்த திலகமே! தாள முத்தே! எங்கள் தியாகியே! நீ ஆரிய பலிபீடத்திற்கு அன்றோர் சமயம் இரையான நாள் இது. மன்னிப்புக்கேட்டு நீ மீண்டு போ என்று சொன்ன மாபாதகரை வெறுத்துத் தள்ளி நீ மாண்டாயே சிறையில்! இனிய தமிழ் காக்க நின் உயிரைத் தந்தாயே! செத்து மடிந்தாலும் சிறையில் மடிவேனேயன்றி கட்டாய இந்தி தொலையா முன்னம் வெளியேற மாட்டேன் மாட்டேன் என்று சூள் உரைத்துவிட்டு, நின் காதல் மனையாளையும் மறந்துவிட்டு, உன்போலவே முன் மடிந்த நடராசனைத் தேடிச் சென்றாயே! நின் தியாகத்தை, தீரத்தை, அஞ்சாத நெஞ்சத்தை, தமிழ்ப் பற்றை என்னென்று சொல்லி வாழ்த்துவோம்! உன்னை எண்ணுகிறோம். வீர உணர்ச்சி கொள்கிறோம். உன்னை எண்ணுகிறோம். தமிழ் மொழியிடம் தணியாத காதல் கொள்கிறோம். உன்னை எண்ணுகிறோம். இயக்கத்தைக் கண்ணின் மணியெனப் போற்றி வளர்க்கிறோம். வீரம் என்ற சொல்லைக் காணும்போதெல்லாம் உன்னைக் காண்கிறோம். வாழ்க நின் பெயர் என வாழ்த்துகிறோம்.

எங்கள் தாளமுத்தே! வீர இளஞ் சிங்கமே! நீ வாழ்க! உன் நினைவு எம் உள்ளத்தெல்லாம் உரிமை வேட்கையை நாளும் நாளும் எழுப்புமாக!

களை அடக்கியவர்கள் இன்று சிறைக் கைதிகளாகக்கூட இல்லை, நாட்டை விட்டே வெளியேறி விட்டார்கள். ஆனால் நம்மீது எந்தெந்த "செக்ஷன்" களை எடுத்தெடுத்து வீசலாம் என்ற நுண்ணிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு விட்ட சர்க்கார் இந்த அடிப்படை உண்மைகளை மறக்கமாட்டார்கள் என்று யார் உறுதி கூறமுடியும்?

எந்த வினாடியிலும், எத்தகைய சர்க்கார் பிரங்கியும், எத்தன்மைத்தான குண்டுகளையும் நம்மீது பாய்ச்சக்கூடும்.

ஆனால் அச்சம் நமக்கு அணுவளவும் இல்லை. ஏன்? உண்மை நம் பக்கம் இருக்கிறது. நியாயம் நம் பக்கம் இருக்கிறது. உண்மையும் நியாயமும் என்றும் அழியாத பொருள்கள் என்ற தத்துவத்தை உணரும் திறம் மட்டுமல்ல, அதை நடைமுறையில் கையாளும் நெஞ்சஉரமும் நமக்கு இருக்கிறது. வேறு எதுவும் நமக்கு இல்லை மெய்தான். ஆனால் வேறு என்ன நமக்கு வேண்டும்?

---

## அட்டைப் படம்:

இல்லாத கருஞ் சட்டைப் 'படையை' இருப்பதாக எண்ணிக் கொண்டு, வெறுஞ் சட்டையைக் கண்டு மிரள்கிறது பிராமணீயம்! அதற்கு ஏற்றாற்போல் சென்னை சர்க்கார் வெறுஞ் சட்டையைத் தடி (கிரிமினல் திருத்தச் சட்டம்) கொண்டு தாக்குகிறது!! அர்த்தமற்ற காட்சிதான்! ஆனால் அதுதான் இன்று நடக்கிறது.

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வது" போன்றதாக இராமல், நமது சமுதாய வாழ்க்கையின் அடிப்படையையே முற்றிலும் இடித்துத் தகர்த்து அழித்து ஒழித்துவிட்டு புதிய உலகம் எனும் புது மாளிகையை எழுப்புவதாக உள்ளது என்பதை மிக நுணுக்கமாக—ஆனால் எவரும் எளிதில் அறியத்தக்க முறையில் மிக விளக்கமாக எடுத்துரைத்தார்கள். ஒருக்கால் தான் கைது செய்யப்பட்டால் மக்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதையும் குறிப்பாக உணர்த்தினார்கள்.

இந்தக் கடற்கரைக் கூட்டம், ஒரு புறத்தில் கடலைத் தொட்டுக் கொண்டும் மறுபுறத்தில் மெரினா நெடுஞ்சாலையை அணைத்துக் கொண்டும், மற்றுமோர் கடலென விரிந்து பரந்திருந்தது. எப்பக்கம் திரும்பிப் பார்த்தாலும் மக்கட் கூட்டம்! கூட்டத்தின் அளவும் கூடியோரின் உள்ளக் கொதிப்பும், பேசியோரின் வீர உரையும், கையில் சிறு பொட்டலங்களோடும் சிற்றுண்டி முடிச்சுகளோடும் இருந்த தன்மையும், பலர் சாய்ந்து படுத்துக்கொண்டே தலைவர்களின் எழில் உரைகளைச் செவிமடுத்த நிலைமையும் இந்தி எதிர்ப்புக் காலத்தையே நினைப்பூட்டின. அந்தக் காலத்திய கடற்கரை கூட்டங்களைக் கண்டவர்கள் பலர் இதையும் கண்டபோது இதென்ன இந்தி எதிர்ப்புக் கூட்டமா என்று வாய் விட்டுக் கூறிவிட்டனர். "தலைவர் பெரியார் புது செய்திகள் ஏதேதோ தான் பேசினார். ஆனால் இன்று பெரியார் ஆற்றிய பேருரையையும் இந்தக் கூட்டத்தையும்பார்க்கும்போது எனக்கு 1938 தான் கவனத்திற்கு வருகிறது" என்றார் அண்ணாதுரை. அது உண்மையுங்கூட. அந்தக் கூட்டம் 1938 ஐத்தான் நினைப்பூட்டுகிறது. அந்த மார்ச் 7, பழைய ஜூன் 3 ஐத்தான் நினைப்பூட்டுகிறது. அன்று எழுந்த "அணிவோம்! அணிவோம்! கருஞ்சட்டை அணிவோம்!" என்ற முழக்கம் "வாழ்க தமிழ்! ஒழிக கட்டாய இந்தி!" என்ற பழைய பாசுரத்தைத்தான் கவனப்படுத்துகிறது. ஏன்? அன்று அண்ணாமலையில் நம் தோழர்கள் மீது வீசப்பட்ட சட்டம் ஆச்சாரியார் அந்த நாளில் இந்தி எதிர்ப்பாளர்கள் மீது வீசிய அதே கிரி... னல் திருத்தச் சட்டம்தானே "அடக்குமுறை கண்டு அஞ்... மாட்டோம்! வீணர்தம் வெறி... செயல் கண்டு ஓயமாட்டோம்" என்று அன்று கடற்கரையி... எழுந்த கீதமும் 1938 லே... எழுந்த கீதம்தானே! ஆகவேதா... திராவிட இன எழுச்சிப் போரா... டம் இந்திப் போராட்ட எண்ண... களை நம் உள்ளத்தில் அலைமோத... செய்கிறது. அவ்வளவு தூர... போவானேன்? திராவிட இ... எழுச்சி என்னும் கட்டிடமே இ... திப் போர் என்ற அடிப்படையி... மீது எழுப்பப்பட்டதுதானே... வாழ்க தமிழ் என்றது இ... எதிர்ப்பு. வாழ்க தமிழகம் என்ற... சூழ்நிலை. வாழ்க திராவிடம் எ... றன பகுத்தறிவும் வரலாறும். ந... மூன்றையும் ஒன்று சேர்த்... சொல்லத் தொடங்கினோம்.

வாழ்க தமிழ்!

வாழ்க தமிழகம்!

வாழ்க திராவிடம்!

---

## வரப் பெற்றோம்

1. வேலூர் திராவிடன் பதி... கத்தார் வெளியிட்ட அழகிய ... ஆண்டு காலண்டர். விலை அ... பெரியார், பாரதிதாசன், அண்... துரை, நெடுஞ்செழியன், அன்... கன், ஜனார்த்தனம், சம்பத், வே... சலம், செல்வம், நாகம்மை... அனைவர் படங்களும் கொண்... ஆர்ட் தாளில் அமைந்தது. ... விற்பனைக்கு.

2, திருச்சி மதுரம் கம்... யாருடைய குருமருந்து கா... டர்; சென்னை முட்டை ம... கைலி காலண்டர்; "நூருல்... லாம்" பத்திரிகை காலண்... சென்னை திராவிட ... ஜன்... அண்டு அட்வர்டைசர்ஸ் காலண்... முதலானவை. இவை விற்பனை... அல்ல! நம் பார்வைக்கு!

## மனப் புயல்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

யிறு முதுகெலும்போடு ஒட்டிக்கொண்டும், மற்றொருவன் யிறு சால் போலப் பருத்து ருப்பதன் காரணமென்ன? ன் தயங்குகிறீர்கள். உண்மை யச் சொல்லுங்கள்!' என்று கேட்போம். பார்ப்போர் ஏழை ளுக்காகப் பரிந்து பேசுவார் ள். இப்படியே பலருடைய ள்ளங்களையும் மாற்றி, ஏழை ளையும் மனிதராக்கலாமென்று னவுகள் கண்டோம்!

குமார்! அந்தக் கனவுகளும் ராணங்களும் ஒன்றே. அவ் ளவும் பொய்! கலைஞனாய்த் திகழும் உனக்கு, கலையைக் குறை கூறுகிறேனே யென்று கோபம் வரலாம். நான் பழத் தூருக்கு வருவதற்கு முன்பு யாராவது இப்படி எழுதியிருந் தால் எனக்குக்கூடத்தான் கோபம் வந்திருக்கும். பழத் தூர் என் பழைய கனவுகளுக் குச் சமாதி கட்டியது.

முதலில் நான், ஏழைகளின் வீடு வீடாய்ச் சென்று அவர் களின் வாழ்க்கையைச் சித்திரங் களாகச் சித்திரிக்கலா மென்று நான் தீர்மானித்தேன். அவ் வண்ணமே அவர்களது வீடு களுக்குச் சென்றேன். சித்திரம் தீட்டினேனா? இல்லை! சிந்தனைத் தெளிவு பெற்றேன். அதுவரை லை என்ற வர்ணக் கண்ணாடியின் ழியாக உலகைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு அன்று உண் ம உலகை உள்ளது உள்ளபடி ண்டபோது வெட்கமும், கோப ம், சோகமும் பிறிட்டுக்கொண்டு ந்தன!

குமார், நான் கண்ட கோர ான சம்பவங்களை அவற்றின் ழுப் பொருளும் தோன்றும் டி எழுத்தின்மூலம் விளக்கு ளவிற்கு எனக்கு ஆற்றலில்லை! ஆனாலும் கண்டவைகளை என் பதைமட்டும் சொல்கிறேன். பாலில்லையே என்றழும் பச்சிளங் குழந்தைகள்! அய்யோ உணவில்லையே, உடலில் இரத்த மில்லையே, பத்து மாதங்கள் சுமந்து பெற்ற என் பாலக னுக்குப் பால் கொடுக்கலாமென் றாலும் பால் சுரக்கவில்லையே, என்று கதறும் தாய்மார்களின் ஏக்கம் நிறைந்த கண்கள். பாடு பட்டு உழைத்தும் ஜமீன்தார் கூலி தரவில்லையே என்று ஈனக் குரலில் அழும் உழவர்கள்! பக லெல்லாம் மாடு மேய்ந்ததாலும், பசி தணியுமளவிற்கு உணவு கிடைக்காத களைப்பால் படுத் துறங்கும் சிறுவர்கள்—இவர்க ளைக் கண்டேன். அங்கிருந்த குப்பை கூளங்களில் கலையைக் கண்டேன். அவற்றையே தம் மாட மாளிகையாகக் கொண்டு வாழும் அந்த ஏழைகளின் அழுகுரலிலே கலையைக் கண் டேன். அவர்களது ஏக்கம் நிறைந்த கண்களிலே கலையைக் கண்டேன். தோல் மூடிக் கிடந்த எலும்புக் கூடுகளிலே கலையைக் கண்டேன். குழி விழுந்த கன்னங்கள், மெலிந்த கைகள், முதுகெலும்போடு முத்தமிட்டுக்கொண் டிருந்த வயிறு, தள்ளாடித் தள்ளாடி நடந்த கால்கள்—இவற்றிலெல் லாம் கலையைக் கண்டேன். ஓவியம் தீட்டுவதற்கு இவைக ளெல்லாம் ஏற்றவை என்று மகிழ்ந்தேன். உடனே என் தலையில் பலமான ஒரு அடி விழுந்தது. என்னவென்று அலறிக் கேட்டேன். "அட பாவி! உயிரோடு போராடும் இந்த உருவங்களிலா கலையைக் காண்கிறாய்! இந்தக் கோரத் தைக் கண்டு இரத்தம் கொதிப் பேறாமல், சாந்தமாக, அமைதி யாக, ஆநந்தமாக, ஓவியத்திற்கு ஏற்ற கருப் பொருள்கள் என்று இவற்றை எண்ணச் சொல்லு கிறதா உன் கலையறிவு! கலை! ஓவியம்! கலை! ஓவியம்! நீயும் உன் கலையும் பாழாய்ப் போக!.... கோபால்! மறுபடியும் பார் இந்தக் காட்சியை....ஏன் உன் முகத்தில் ஒரு மாற்றமும் ஏற் படவில்லை.........ஓகோ! கலை யென்ற கண்ணாடி உன் கண்களை மறைக்கிறது! அந்தக் கண்ணா டியை எடுத்துவிட்டுப்பார்!"

"நீ யார்?"

"உன் பகுத்தறிவு!"

பகுத்தறிவு சொல்லிய வண் ணம் பார்த்தேன். என் நெஞ் சம் பதை பதைத்தது. என் கண்களில் நீர் கப்பியது. உடனே கலையின்மேல் ஆத்தி ரம் ஆத்திரமாக வந்தது. அடுத்த கணம் கலையென்ற அந்த வர்ணக் கண்ணாடி தூள் தூளாகியது.........

குமார், இனி நான் ஏழைக ளுக்காகஉழைக்கப் போகிறேன். நீ யென்ன செய்யப்போகி றாய்? அறையில் உட்கார்ந்த படியே கலை யென்ற கருவியால், நம் மக்களுக்கு நன்மையைச் செய்ய முடியுமென்ற அந்தப் பழைய கனவிலேதான் மூழ்கிக் கிடக்கப்போகிறாயா?

உரிமை, நல்வாழ்வு, ஆகிய இவற்றின் கருத்துகளை யெல் லாம் சொல்லிச் சொல்லி, இங் குள்ள உழவர்கள், ஜமீன்தா ரிடம் உழைப்பிற்கேற்ற பலனுக் காகப் போரிடச் சித்தமாகிக் கொண் டிருக்கிறார்கள். நான் அவர்களின் தோளோடு தோளி ருந்து உழைக்கப்போகிறேன். ஆனால் நீ?

அதிகமெழுதினால் வெறுப் புண்டாகுமோ என்று அஞ்சி இத்தோடு இக் கடிதத்தை முடிக்கிறேன்.

உன் தோழன்,

**கோபால்.**

* * *

இந்த கடிதத்தைப் படித்து முடித்ததும் அவன் உள்ளத்தில் பற்பல எண்ணங்கள் தோன்றின. அரசியலிலே பங்கெடுத்துக்கொண்டு அல்லும் பகலும் அநேகர் உழைக்கிறார்களே, அந்த உழைப்புப் போதாதா? இன்னும் பலர் அதே வேலைக்கேன் செல்லவேண்டும்......

ஒருவேளை, அவ்வளவு பேரிலே, ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் வேஷக்காரர்களா? ........ஆம் அப்படித்தானிருக்க வேண்டும்! இல்லாவிட்டால் வறுமையும் வாட்டமும், நாட்டில் இன்னுமிருக்கக் காரணமென்ன?—இப்படி யெண்ணினான். அந்த நினைவு அவன் உள்ளத்தை நிலை கலங்கச் செய்தது. பிறகுங்கூட அது அங்கேயே சுழன்று சுழன்று வட்டமிட்டுக்கொண்டே யிருந்தது. ஆயாசத்தோடு அவன் அப்படியே சாய்ந்து தூங்கிவிட்டான்.

ஒரு பரந்த வெளி! அதிலே குமார் உலாவிக்கொண்டிருந்தான். சிந்தனையின் சிரல்கள் அவன் நெற்றியிலே நன்கு தெரிந்தன. "உண்மை உழைப்பு"—முணுமுணுத்தது இப்படி அவன் வாய்! பின்புறமாக கைகளை வைத்துக்கொண்டு தலை நிமிர்ந்து வானத்தைப் பார்த்துக்கொண்டு மெதுவாக நடக்கலானான்! "உழைக்கிறார்கள் பலர்" என உரக்கக் கத்தினான்.

மின்னல்! இடி! திடுக்கிட்டு கண்களை மூடிக்கொண்டான். சிறிது நேரம் கழித்து, கண் திறந்தான். தன்னெதிராக வரிசை வரிசையாகப் பலர்—மிகப் பலர் நின்றுகொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டான்!

"நீங்களெல்லாம் யார்?"

"தேசத்திற்காக உழைப்பவர்கள்".

"உழைப்பவர்களா" என்று கூறி உரக்கச் சிரித்தான்! "உங்களிலே எவ்வளவு பேர் "உண்மை உழைப்பாளிகள்?" —ஆவேசம் வந்தவன் போல் கேட்டான். மறுபடியும் மின்னல்! இடி!

அவன் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. முன்பு வரிசை வரிசையாக நின்றுகொண்டிருந்த ஏராளமான பேர்களிலே பலரைக் காணோம். ஒரு சிலர் மட்டுமே ஒரு மேடையின்மேல் நின்றுகொண்டிருந்தார்கள்."

"நீங்கள் யார்?"

"தொண்டர்கள்"

"உண்மையிலேயே உழைத்தவர்களா?"

"ஆம் உழைத்தவர்கள். இனியும் உழைக்கப்போகிறவர்கள்,"

"நான் உங்களின் பேச்சை யெப்படி நம்புவது?"

"இதோ, எங்களைப் பார்!"

"அய்யோ!" என்றலறினான். அக்காட்சி அவன் உடலைத் தூக்கி வாரிப்போட்டது!

மேடையின் மேல் நின்றுகொண்டிருந்தவர்களின் உடல்களிலிருந்து இரத்தம் பீரிட்டுக்கொண்டு வெளியே வந்தது. அவர்களது உடல்களிலிருந்து நரம்பும் தசையும், அறுந்து அறுந்து கீழே விழுந்த வண்ணமிருந்தன. இரத்தம் மேடையின் நாலாப் பக்கங்களிலும் ஓடிக்கொண்டிருந்தது.

"பார்க்கச் சகிக்கவில்லையே," என்று கூறி கண்களை மூடிக்கொண்டு, கீழே சாய்ந்துவிட்டான். சிறிது நேரம் கழித்து எழுந்தான்.

(தொடரும்)

## தூத்துக்குடி மாநாடு

திராவிடர் கழக 18-வது மாகாண மாநாட்டை தூத்துக்குடியில் ஏப்ரல் இறுதியில் நடத்த தலைவர் பெரியார் அவர்கள் அனுமதி கொடுத்துள்ளார்கள். மாநாடு, "இதுவரை யாரும் நடத்தாத முறையிலும் இனிமேலும் யாராலும் நடத்தப் படாத முறையிலும்" அவ்வளவு சிறப்பாக நடத்தப்படும் என்று மாநாட்டு அமைப்பாளர்கள் அறிவிக்கின்றனர். மாநாட்டு வேலைகள் மும்முரமாக நடைபெறுகின்றன. பந்தல் அமைப்பதற்கான இடம் தேர்ந்தெடுக்கப் பட்டாய் விட்டது. 14-3-48 ஞாயிறு மாலை 5 மணிக்கு தூத்துக்குடியில் கூடும் கூட்டத்தில் வரவேற்புக் குழு அமைக்கப்படும். மாநாடு பற்றிய தகவல்கள் வேண்டுவோர், கே. வி. கே. சாமி, நெல்லை மாவட்ட திராவிடர் கழகச் செயலாளர், தூத்துக்குடி என்ற முகவரிக்கு எழுதவும்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

ஷம் உண்டு. ஆனு, சிரிக்கத் தெரியாது. நாய் வாலே ஆட்டுது ஆனந்தத்திலே. ஆனு சிரிக்காது. தன் ஒருத்தனுக்குத்தான் சிரிக்கத்தெரியும். இந்த ப்பு இருக்குதே, அது எங்கே இருந்து வருது? நல்ல சிலிருந்து வருது, ஆகவே மனிதனுக்கு மனம் க்குது. அதனுலேதான் அவன் சிரிக்கிருன். வே தான் அவன் உயர்ந்தவன் ஆகிருன்.

ாக்ரடீஸ் கதையை நான் படித்திருக்கிறேன். அவர் தன் மனிதனுக வாழவேண்டும் என்று சொன் அதுக்காக, சிரிக்கத் தெரியாத படுபாவிகள் ரை சிறைச்சாலேயில் போட்டாங்க. சிறைக் கம்பி ப் பார்த்ததும், அவர் சிரிச்சிட்டாரு. நான் கூட. ன்னே சிறையிலே போட்டாங்களே அப்போ சிரிச் டேன். நானும் நிஜமாகவே சிரிச்சேன். ன். எஸ். கிருஷ்ணனுக்கு 20 வருஷம் தண்டனே" றவுடனே எனக்குச் சிரிப்புதான் வந்தது. என் ா நாம்ப தப்பு ஒண்ணும் செய்யல்லே! நமக்குத் டனே போடுருங்க! விளேயாட்டுக்குப் போடருங்க ல இருக்கிறது, பிறகு விட்டுடுவாங்க என்று சிரிச் ன். அப்புறம் சிறைக்குப் போனேன். என்னேப் த்ததும் அங்கே இருந்த 1500 கைதிகளும் கிஷ்டன் கிஷ்டன்" என்று சிரிச்சாங்க, நானும் ச்சேன். அங்கே 'பிரஸ்' என்று ஒரு இடம் இருக் . அங்கே இரு கிருஷ்ணு என்று சொன்னுங்க. அப் ம் சிரிச்சேன். அப்புறம் உன் மேலே தப்பு ணுமில்லே, போ வெளியே என்று "கழுத்தைப் ச்சு" வெளியே தள்ளினுங்க. அதுக்கும் சிரிச் ன். அதுக்குத்தான் ரொம்ப சிரிச்சேன். எதுக்குச் ால்றேன், எனக்கு அறிவில்லே, அநுபவம் இல்லே, னே இவ்வளவு சிரிக்கிறேன்னு' சாக்ரடீஸ் எவ் வு சிரிச்சிருப்பாரு என்று காட்டத்தான்.

சாக்ரடீஸ், நீ சிந்திக்கணும் சிந்திக்கணும் என்று ால்லி மக்களே எல்லாம் கெடுத்துப் போட்டே; ா விஷக்கோப்பை என்று சொன்னபோது அவர் ணீர் விட்டுக் கதறி இருப்பாரா? கிடையாது. ச்சாரு. அப்பறம், சிறையிலே இரு கொஞ்ச க்கு இன்னுங்களே, அப்பவும் சிரிச்சாரு. அவர் ருங்க வந்து ஓடிவந்தூடுங்க, தப்பிச்சிகினு யிடலாம் என்று சொன்னுங்களே, அப்பவும் ச்சாரு. சாக்ரடீஸ் பண்பட்ட உள்ளம் படைச்ச ஆகவே சிரித்தாரு. பண்பட்ட உள்ளத்திலிருந்து ன் பண்பட்ட சிரிப்பு தோன்றும். அதுனுலேதான் க சிரிச்சா எனக்கு ஆநந்தம். என்னேப் பார்க்கற ாதெல்லாம் சிரிக்கறீங்க. பார்க்கறபோதென்னு. ணக்கிற போதெல்லாம்கூட சிரிக்கலாம். சிரிங்க. மா சிரிங்க.

பண்பட்ட உள்ளத்தைப் பற்றிச் சொன்னேன், த் உள்ளம் ஒரு மாதத்திற்கு முன் மறைந்து யிற்று. காந்தி மறைந்துவிட்டார். அவர் மறை க்கு யார்காரணம்? நான் காரணம். நீங்க காரணம். லாருந்தான் காரணம். இதை நான்சொல்லவில்லே. ல்கலாம் ஆசாத் சொன்னுர். மதவெறி சாதிவெறி தான் மகாத்மாவைக் கொன்றுவிட்டது என்று ர் சொன்னுர். இந்தியாவில் உள்ள ஒவ்வொரு ம் ஒவ்வோர் அளவிற்கேனும் மதவெறி மயக்கத்தில் இருந்தனர்—அதுதான் மகாத்மா மரணத்திற்குக் காரணம் என்று அவர் சொன்னுர் அது உண்மையும்தான்.

சமீபத்தில் டில்லியில் ஜவகர்லால் நேரு பேசும் போது, நம் மக்கள் பசுவை பூஜிக்கிருர்கள்; வணங்கு கிருர்கள். ஆனுல் 'அதை எப்படி வளர்ப்பது என்பதை மட்டும் அறியவில்லே என்று சொன்னுர். அதுபோல் தான் நாம் மகாத்மா சொற்களேக் கேட்டோம். பத்திரிகையில் பார்த்தோம். "பேஷ் பேஷ் யாராலும் இப்படிப் பேசமுடியாது" என்று கை தட்டினேம் ஆனுல் அவர் சொன்னபடி நடக்கவில்லே.

லிங்கன், புத்தர், ஏசு, நபி, காந்தி இப்படி பலர் சொன்னதை எல்லாம் உலகம் கேட்டது—அதன்படி நடக்கவில்லே. அதுதான் தவறு. நாம் அவர்கள் காட்டிய சிறந்த பாதையில் நடந்து நல்லோர் ஆகிவிட வேண்டும். மனத்தால், சொல்லால், செயலால், நல்லோர் ஆகிவிட வேண்டும்..............

நான் அதிகம் பேசப்போவதில்லே. நான் பிரசங்கி அல்ல. நடிகன்; சிறிய நடிகன். அதிலும் நடிப்புக் கலேயில் ஒரு சிறு பகுதியான நகைச்சுவைப் பகுதியில் மட்டும் நடிகன். நீங்கள் என்னே தமிழ் நாட்டு சார்லி சாப்லின் அப்படீன்னு உங்க வரவேற்புத் தாளில் சொல்லி இருக்கிறீங்க. என் மேல் இருக்கிற ஆசையாலே அப்படிச் சொல்லிட்டீங்க. சார்லி சாப்ளினே 1000 பங்கு போட்டா வர்ர ஒரு பங்குக்குக் கூட நான் சமானம் இல்லே. அப்படின்னு சாப்ளினே 1000 துண்டா வெட்டச் சொல்ருன் கிருஷ்ணன் என்று நெனேச்சிக்காதிங்க, சும்மா உவமானத்துக்குச் சொல்றேன்.

என்னே ரொம்ப பாராட்டிட்டீங்க. அதுக்குக் காரணம் உங்க தமிழன்புதான். என்னேவிட சிறந்த நடிகருங்க வடநாட்டிலே மலேயாளத்திலே தெலுங்கு தேசத்திலே எத்தனேயோ பேர் இருக்கருங்க. ஆனு அவங்க யாரும் என். எஸ். கிருஷ்ணன் புகழப்படுவது போல புகழப்படுவதில்லே. அதுக்குக் காரணம் அவங்களிடம் தமிழர்களேப் போல அவ்வளவு அதிகமான தாய் மொழிப்பற்று கிடையாதுங்கறதுதான்.

தமிழர்களுக்கு தமிழ் மொழி கிட்ட ரொம்ப பற்று அதுனுலே என். எஸ். கிருஷ்ணன் கிட்டேயும் பற்று, அவ்வளவுதான்.


சிரிப்பைப்பற்றி பேசச் சொன்னீங்க பேசிட்டேன். தேசத்துக்கு நல்லது செய்யணும், மக்களுக்கு நன்மை செய்யணும், இதுதான் நம்ம வாழ்க்கையிலே நம்ம நோக்கமாக இருக்கணும் என்று சொல்றதோடே என் சிற்றுரையை முடிச்சிக்கிறேன்.

---

## ஏஜண்டுத் தோழர்களுக்கு!

சிலர் பில்படி இன்னும் பணம் அனுப்பாமல் உள்ளனர். அவர்கள் வரும் வியாழக்கிழமைக்குள் வந்து சேரும்படி தொகையை அனுப்பித் தராவிடில், பத்திரிகை எத்தகைய முன் அறிவிப்புமின்றி அடுத்த வாரம் முதல் கண்டிப்பாக நிறுத்தப்படும்.

மானேஜர்.




தொடர் கதை

[முன்பு: ஓவியன் குமார் தன் காதலி குமுதினியுடன் பேசிக் கொண்டிருக்கிறான். அவர்கள் உள்ளத்தில் தென்றல் வீசுகிறது. அதே நேரத்தில் வெளி உலகில் புயல் வீசுகிறது; மழை பொழிகிறது. பிறகு......]

## மறைந்து போங்கள்!

நாட்கள் உருண்டுகொண்டேயிருந்தன. ஒருநாள் குமார் தன் அறையில் சிந்தித்த வண்ணம் மேலும் கீழுமாக உலாவிக் கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு கடிதமிருந்தது. "கலை! கலை!"—இப்படி முணு முணுத்தது அவன் வாய். பிறகு சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டே யோசனையில் ஆழ்ந்தான். அவன் கண்கள் தனக்கு நேரே இருந்த, தன்னால் தீட்டப்பட்ட ஓர் சித்திரத்தின் மேல் சென்று தங்கின. "கலைஞரே! கவிஞரே! புரட்சிக் கவிஞரே" என்று மேலும் அவன் வாயிலிருந்து வார்த்தைகள் உதிர்ந்தன.

"ஆஹா! எவ்வளவு கெம்பீரமான தோற்றம்! சுடர் முகம்! நிறைந்த அறிவைக் காட்டும் பரந்த நெற்றி! இயற்கையை உண்டு தெளிந்த குண்டு விழிகள்! அடர்ந்து வளர்ந்த அழகிய மீசை! குன்றையொத்த பெருந் தோள்கள்! கட்டமைந்த உடல்! புரட்சிக் கவிஞரே, நீர் நீடூழி வாழ்க!" என்று தனக்குத் தானே பெருமையும் கெம்பீரமுமான குரலிலே கூறினான். மின்னலைப்போல அவன் முகத்திலே மகிழ்ச்சியின் கோடு ஒன்று தோன்றி மறைந்தது.

திரும்பவும் ஒருமுறை அக் கடிதத்தைப் படித்துப் பார்த்தான். கண்களை மூடிக்கொண்டு, நெற்றியைத் தடவிக்கொண்டே சிந்தித்தான். மேலும் மேலும் சிந்தித்தான். அந்தக் கடிதத்தை மற்றுமொருமுறை வாசித்தான்! தான் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லையே என்ற ஏக்கம் அவன் முகத்தில் நன்கு தெரிந்தது. சிறிது நேரத்தில் அவன் ஏதோ ஓர் தீர்மானத்திற்கு வந்தவனைப் போல சிரித்தான்! அக்கடிதத்தை உரக்கப் படித்தான்.

* * *

அன்புள்ள குமார்,

வணக்கம். பல நாட்களுக்குப் பிறகு உனக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

நீயும் நானும் சித்ரகல
யாலயத்தில் பயின்றே
ஏதேதோ மனக்கோட்டை
யெல்லாம் கட்டினோம். இ
கனவுகளாகக் கண்டோம்
மையாக, கலைக்காக உ
வேண்டுமென்று உறுதி
டோம். ஏழை எளியவர்
வாழ்க்கையைப் படங்க
தீட்டி, நாட்டு மக்கள்
அவற்றை நீட்டி, "பாரு
உங்களைப்போலப் பிறந்
தப்பிறவிகளை! அவர்கள்
கள்; ஆனால் மனிதர்கள்
மாடுகளைப்போல வண்டியி
இதோ செல்கிறார்களே,
தகுமா?... இந்தப் பட
பாருங்கள். இதோ ஒ
வம் நிற்கிறதே இதைப்
கள்! எண்ணெயே
தலை, ஒட்டிய கன்னங்கள்
குன்றிய கண்கள், மெ
கழுத்து, வெளியே
விலா எலும்புகள்,
வயிறு, குச்சிகளைப்
கால்கள் — இவற்றைப்
கள். அவன் கையிலே
இருக்கிறதே அதனை
நோக்குங்கள்! அதோ,
ஒரு உருவம் மாடி
திண்ணையிலே
கொழுத்து தளதளத்து
கிறதே அதையும் நோக்
அவனும் மனிதன் தான்.
கன்னங்கள் எவ்வளவ
திருக்கின்றன. அவன்
அளவுக்கு மிஞ்சி
பெரியதாக பெருத்திரு
பாருங்கள். நன்றாகக்
கள். தெருவிலே கிடப்ப
திண்ணையிலே உட
கொண்டிருப்பவனையும்
கப் பாருங்கள். உங்க
கண்களையும் நன்றாகத்
கொண்டு பாருங்கள்!

(9-ம் பக்கம் பார்

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimol
at Free Printers, 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B.A.